




நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி, சென்னையில் தி.மு.க. மாணவரணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினர். மாணவர் அணி செயலாளர் ஜெ.வீரமணி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், தி.மு.க. துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., மாவட்டச் செயலாளர்கள் மா.சுப்பிரமணியன், நே.சிற்றரசு, மாதவரம் எஸ்.சுதர்சனம், தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, துணை அமைப்புச் செயலாளர் தாயகம் கவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கருப்பு நிற டிஷர்ட் அணிந்து 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் பங்கேற்று கல்வியை காவிமயமாக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து முழக்கங்களை எழுப்பினர். தி.மு.க. மாணவர் அணி துணைச் செயலாளர்கள் மன்னை சோழராஜன், தமிழரசன், செந்தில்குமார், தமிழ் அமுதரசன், ஆனந்த், கோகுல், பூரண சங்கீதா சின்னமுத்து, ராமகிருஷ்ணன், சுரேஷ் குமார் ஆகியோர் இந்தப் போராட்டத்திற்கு முன்னிலை வகித்தனர். போராட்டத்தின் போது, நீட் தேர்வு அச்சம் காரணமாக தற்கொலை செய்துகொண்ட மாணவர்களின் படங்களுக்கு, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

## தமிழ்நாட்டின் முதலீடுகளைச் சீர்குலைக்கும்

# ‘ரீல்ஸ் கோஷ்டி அரசு’ இனியாவது ஆக்கப்பூர்வமான பணிகளில் கவனம் செலுத்த வேண்டும்!

## கழக தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா தாக்கு!

**சென்னை, ஜூன்.25–**

**தமிழ்நாட்டின் முதலீடுகளை சீர்குலைக்கும் ‘ரீல்ஸ் கோஷ்டி அரசு’ இனியாவது ஆக்கப்பூர்வமான பணிகளில் கவனம் செலுத்த வேண்டும் என கழக தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான முனைவர் டி.ஆர்.பி. ராஜா அறிக்கையில் பதிலடி கொடுத்துள்ளார்.**

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-



த.வெ.க. அரசு பச்சையாகப் பொய் சொல்கிறது. எல்லாவற்றுக்கும் 6 மாத அவகாசம் கேட்கும் ரீல்ஸ்கோஷ்டிஅரசு, தொழில்முதலீடுகள் என்றால் என்ன என்பதை முழுமையாக புரிந்துகொண்டு அதன்பிறகு இது பற்றி பேசலாம். தி.மு.க.ஆட்சிமீதுபழிபோடுவதாக நினைத்து, மாநிலத்தின்பெயருக்கு களங்கம் விளைவிக்க த.வெ.க. அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளால் தொழில் துறையினர் பெரும்அதிருப்தியடைந்துள்ளனர் என்ற உண்மையை உணரக் கூடத்திறனின்றிதற்போதையஆட்சியாளர்கள்தங்களதுதிறமையின்மையை பொய்யான குற்றச்சாட்டுகளால்மறைக்கமுயற்சிப்பதுதமிழ்நாட்டை இழிவுபடுத்தும் செயலாகும்.

முந்தைய ஆட்சிக் காலத்தில் ரூ.3லட்சம் கோடி முதலீடுகள் மாநிலத்தை விட்டு வெளியேறி விட்டதாக அரசு வெளியிட்டுள்ள அறிக்கை ஒரு சிறுபிள்ளைத்தனமான, பொருளாதாரம் மற்றும் தொழில் முதலீடு ஊக்குவிப்பு குறித்த அடிப்படைபுரிதல் இல்லாத பச்சைப் பொய்.

**பா.ஜ.க. அரசுக்கு சேவகம் செய்யும் த.வெ.க. அரசு!**

தொழில் முதலீடுகள் குறித்த இன்றைய ஆட்சியாளர்களின் அறியாமையைஅதுபட்டவர்த்தனமாக வெளிப்படுத்தியுள்ளது. இதில் செமிகண்டக்டர் நிறுவன முதலீடுகள் தானாக குஜராத் மாநிலத்திற்கு செல்லவில்லை. ஒன்றிய அரசால் திட்டமிட்டு தமிழ்நாட்டிலிருந்து பறிக்கப்பட்டவை என்பதை எங்கள் தலைவர், முன்னாள் முதலமைச்சர் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், 2024 நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சார மேடையிலேயே பகிரங்கமான குற்றச்சாட்டாக வைத்தார், டெல்லியுடன் தொடர்ந்து போராடினார். இதை பற்றி ஒரு வார்த்தை பேசாமல், தி.மு.க.வையே குற்றம் சாட்டுவதன்மூலம், தமிழ்நாட்டின் நலனைக்காவுகொடுத்து, பா.ஜ.க. தலைமையிலான ஒன்றிய அரசுக்கு த.வெ.க அரசு சேவகம் செய்வது அம்பலமாகியுள்ளது. டொயோட்டா வாகனத் துறை நிறுவனத்தைப்பொறுத்தவரை, அவர்கள் ஏற்கனவே பல ஆண்டுகளாக கர்நாடக மாநிலத்தில் தங்களது முதலீட்டை செய்துள்ளனர் ஆனால்மகாராஷ்டிராமாநிலத்தில் முதலீடு செய்யும் தங்களது இறுதி முடிவை தற்போதைய த.வெ.க. ஆட்சி அமைந்த பிறகுதான் அறிவித்துள்ளது. என்னால் இவர்கள் சொல்லும் எல்லா பொய்களுக்கும் புள்ளிவிவரங்களோடு பதில் அளிக்கமுடியும். இவைஎதைப்பற்றியும் புரிந்துகொள்ளக் கூடிய திறனற்ற த.வெ.க. அரசு, முந்தைய அரசு கொண்டு வந்த முதலீடுகளுக்கு மட்டும் ஸ்டிக்கர் ஒட்டிக் கொள்வது வெட்கக்கேடானது.

**அற்ப அரசியல் தாக்குதல்!**

முதலீடுகள்அரசியலாக்கப்படக் கூடாதுஎன்பதில்எங்கள்தலைவர் தலைமையிலான அரசும் அதில் அமைச்சராகஇருந்தநானும்உறுதியாக இருந்தோம். முதலீட்டு ஊக்குவிப்பைச் சுற்றியுள்ள அற்ப அரசியல்தாக்குதல்கள்மாநிலத்திற்குத்தான பாதிப்பை ஏற்படுத்தும். எனது பதவிக் காலம் முழுவதும் முதலீடுகள் தொடர்பாக பல தரப்பிலிருந்தும் விமர்சனங்களை எதிர்கொண்டேன். தேவையானபோது மட்டுமே பதிலளித்தேன். ஆனால் எந்த முதலீட்டாளரையும் சிரமமான நிலைக்கு தள்ளாதிருப்பதில் எப்போதும்கவனமாக்இருந்தேன். அமைச்சரானஎனக்குஅந்தமுதிர்ச்சியை வழங்கக்கூடிய தகுதியுடையவராக எங்கள் முதலமைச்சர் இருந்தார். புதிய ஆட்சியாளர்கள் இனியாவது இதை உணர்ந்து, ஒரு அரசியல் வாதத்தில் வெற்றி பெறுவதற்காக பல முதலீட்டாளர்களின் பெயர்களை சேற்றில் இழுத்து விடாமல் இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

**சீர்குலைக்கப்படும் முதலீட்டுச் சூழல்!**

நேற்று முதல், பல தொழில் துறையினர்எனக்குதொலைபேசி மூலமாக பேசி இந்த புதிய அரசின் பிரதிநிதிகள் விமர்சனங்களை கையாளும்விதமும், பொதுவெளியில் சேறு வாரி இறைக்கும் விதமும் குறித்து அவர்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர். உலகளாவிய முதலீட்டாளர்களின் முன்னிலையில்தமிழ்நாடுஅவமானப்படுத்தப்படுகிறது. எல்லாவற்றையும் அரசியல் பார்வையோடு பார்க்காமல் முதலமைச்சர்தொழில்துறையில் தனி கவனம் செலுத்தவேண்டும். இதில்அரசியல்சாயம்பூசப்பட்டால் தமிழகத்தில் நிலவிய மிகுந்த ஆரோக்கியமான முதலீட்டு சூழல் முற்றிலும்சீர்குலைக்கப்படும். இது மற்ற மாநிலங்களுக்கு சாதகமாக அமைந்துவிடும்.

எதிர்க்கட்சித்தலைவர்உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாநிலத்தை விட்டுமுதலீடுகள்வெளியேறுவது குறித்து கேள்வி எழுப்பிய நிலையில், முதலீடுகள் வெளியேறாமல் தடுக்க என்ன நடவடிக்கைள் எடுத்தது என்பதை விளக்க வேண்டியதேபுதியஅரசின்கடமை. அதற்கு பதிலாக, முந்தைய அரசின் கடின உழைப்பின் மீது தங்களது பெயர் ஒட்டும்செயலில்அவர்கள்ஈடுபடக் கூடாது.

ஊடகங்களின் சில பிரிவுகள் மூலம் பரப்பப்பட்ட பொய்யான ஊழல் குற்றச்சாட்டுகள், அரசின் அதிகாரப்பூர்வஅறிக்கையில்குறிப்பிடத்தக்க வகையில் இடம்பெறவில்லைஎன்பதுஉண்மைஎன்னவென்று உரக்க சொல்கிறது. ஏனெனில் 12.50 லட்சம் கோடி ரூபாய்முதலீடுமூலமாக30லட்சத்திற்கும் மேலான வேலைவாய்ப்புகள் உருவாகியது திராவிடநாயகர் மு.க.ஸ்டாலின்தலைமையிலான திமுகஅரசுஎன்பதுஉலகம்அறிந்த உண்மை. ஆகவே தான் மாண்புமிகுமுதலமைச்சர்மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசில் இதுவரை இந்தியாவில் எந்த மாநிலமும் நடத்த முடியாத “கன்வர்ஷன்கான்க்ளேவ்”நடத்தப்பட்டு அதில் நானே பவர் பாயிண்ட் பிரசன்டேஷன் மூலமாக முதலீடு விவரங்களை எடுத்துரைத்தேன். இந்தியாவில் மற்ற மாநிலங்களில் பல இதர காரணங்களினால் முதலீடு செய்துள்ள நிறுவனங்களின் லிஸ்டை வைத்துக்கொண்டு 3 இலட்சம் கோடி இழப்பு என்பது பொய்யான குற்றச்சாட்டு. இதில் நகைப்பிற்குரிய விடயம் என்னவென்றால் அவர்களது அறிக்கையிலேயேஅந்தநிறுவங்களின்முடிவுக்கு விளக்கம் உள்ளது!

**திராவிட மாடல் அரசின் சாதனை!**

முந்தையஅ.தி.மு.கஆட்சியில் 3 இலட்சம் கோடிக்கும் குறைவாகவே முதலீடுகள் வந்துள்ள நிலையில் எங்கள் ஆட்சிக் காலத்தில் ரூ.12.6 லட்சம் கோடி முதலீட்டு உறுதிமொழிகளையும், 36லட்சத்திற்கும்மேற்பட்டவேலைவாய்ப்புகளையும் தமிழ்நாடு பெற்றிருக்கிறது. இது 2016-21காலகட்டத்தை விட 5 மடங்காகும். திராவிடர் மாடல் அரசு தொடர்ந்திருந்தால் இம்முறைகுறைந்தபட்சம்25லட்சம் கோடி முதலீடு வந்திருக்கும். இன்று இந்த அரசு சிறுபிள்ளைத்தனமான பேச்சுகளை குறைத்து தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் இந்த சாதனையை திராணியிருந்தால்முறியடித்து காட்டட்டும் பார்போம். இல்லை இதில் பாதியாவது செய்யட்டும் பார்ப்போம்.

உலகளாவிய முதலீடுகளுக்கானபோட்டிமிகக்கடுமையானது; முதலீட்டாளர்களுக்கு பல்வேறு தேர்வுகள்உள்ளன. இந்நிலையில் இன்றையரீல்ஸ்மாடல்அரசுசொல்லும்ஊழல்குற்றச்சாட்டுகள்உண்மையாகஇருந்திருந்தால், இந்தியாவின் அதிவேகமாக வளர்ந்து 2024-25ல் 11.2% ஆகவும் 2025-26ல் 13.16% ஆகவும் இரட்டை இலக்க வளர்ச்சியைக் கொண்ட மாநிலப் பொருளாதாரமாக நாம் உருவாகியிருக்க முடியாது. இந்தியாவின் மொத்த உற்பத்தி வளர்ச்சியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு ஏறத்தாழ 14.5% ஆகவும் இருந்திருக்காது. தமிழ்நாட்டின் அனைத்து மண்டலங்களுக்கும் தொழில் வளர்ச்சி கிடைத்திருக்காது. இதெல்லாம்இன்றைய ஆட்சியாளர்கள் முதலில் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் செயல்பாடுகளை பார்த்து கற்றுக்கொண்டு அதில் 10% பணியை தற்போது பொறுப்பில் உள்ளவர்கள் செய்தாலே தமிழகத்தில் இன்று நிலவும் அசாதாரண முதலீட்டுச் சூழல் சற்று சரியாகும்.

**‘ரீல்ஸ் மாபியா’ கோஷ்டிகளை வைத்து பொய்கள் பரப்பல்!**

உண்மைகளைமறைத்து, அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு பரப்பப்படும்அவதூறுகளால்தனிப்பட்ட முறையில் திமுக பாதிக்கப்படப் போவதில்லை. ஆனால், இப்படி பொறுப்பற்றமுறையில்தமிழ்நாட்டின் முதலீட்டு ஊக்குவிப்பு செயல்பாடுகள் மீது சேற்றை அள்ளி வீசினால் தமிழ்நாடு என்கிற இந்த மகத்தான மாநிலத்தின் வளர்ச்சி தான் பாதிக்கப்படும். புதிய முதலீடுகளை ஈர்க்கும் வாய்ப்பு பறிபோகும். தமிழ்நாட்டிலிருந்து வாய்ப்புகளை அண்டை மாநிலங்களுக்கு எடுத்துச் செல்ல உதவுவதேஇந்தஅரசின்நோக்கம்அல்ல என்று நான் இன்னமும் மனப்பூர்வமாகநம்புகிறேன். எங்கள்தலைவரும் அவர் வழியிலான இயக்கமும் நானும் தமிழ்நாட்டின் வளர்ச்சியை மட்டுமே நோக்கமாகக் கொண்டவர்கள்.

ரீல்ஸ்மாஃபியாகோஷ்டிகளை வைத்து பொய்களைப் பரப்பி, தி.முக.வை குறை சொல்வதை இனியாவது விட்டொழியுங்கள். 2016-21அ.தி.மு.கஆட்சியைவிட 5மடங்குஅதிகமானமுதலீடுகளை தி.மு.கஅரசுஈர்த்தநிலையில், அந்தளவில் கூட அல்ல, உங்கள் ஆட்சிக்காலத்தில் எங்களைவிட இரண்டு மடங்கு அளவிலாவது முதலீட்டை ஈர்க்க முடிகிறதா என்கிற வேலையை உருப்படியாகப் பாருங்கள். அர்த்தமற்ற அரைவேக்காட்டுஅரசியல்காழ்ப்புணர்ச்சியோடு குறை பேசுவதை விட்டு, கொஞ்சமாவது செயல்படட்டும் த.வெ.க. அரசு.

# இது தான் அந்த ஒரிஜினல் கதை..!

அந்த பெரியவர், நல்ல வெய்யில்ல தன்னோட புருவத்துக்கு மேல, நெத்தில கைய வச்சிக்கிட்டு சுத்தியும் பார்த்தாராம். ஒரு குட்டிப்பையன் வந்து என்ன தேடுறீங்கன்னு கேட்டதற்கு...

அந்த பெரியவர் சொன்னாராம், உங்க அப்பாவ தேடுறேன் தம்பின்னு.

ஏன் எங்க அப்பாவைத் தேடுறீங்கன்னு அந்தப் பையன் கேட்டதுக்கு...

நான் ஒரு விவசாயி தம்பி... உங்கப்பா மூணுலட்சம் பேருக்கு இலவச மின் இணைப்பு கொடுத்தாரு, நெல் கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுத்தாரு, வருடா வருடம் ஜூன்12 தண்ணிய மேட்டூர்லேர்ந்து திறந்து விட்டிட்டுருந்தாரு, மின் வெட்டு இல்லாம, மே மாசத்துலேயே குறுவை சாகுபடிக்கு ஏற்பாடு செஞ்சாரு. முப்போகம் விளைவிச்சோம், வரலாறு காணாத விளைச்சல்... ஏகப்பட்ட நெல் கொள்முதல் நிலையங்களை அஞ்சு வருசத்துல புதுசா திறந்தாரு... இன்னும் 20 லட்சம் அதி நவீன மின் மோட்டார் தர்றேன்னும் சொன்னாரு தம்பி...

ஆனா திடீர்ன்னு ஒருத்தன் வந்து, நீங்க வாங்கியிருக்குற கடனை எல்லாம் முழுசா தள்ளுபடி பண்ணிடறேன்னு சொல்லி, எங்களை ஏமாத்தி, எங்க கையில இருந்த வாக்குகளை திருடிட்டு போயிட்டான் தம்பி...! இப்ப எங்க கடனையும் முழுசா தள்ளுபடி பண்ணாம ஏமாத்திட்டான் தம்பி...!



**சௌமியன் வைத்தியநாதன்**
*கழக இலக்கிய அணி துணைச் செயலாளர்*

அதனாலதான்உங்கப்பாவதேடிட்டிருக்கேன் தம்பி... தப்பு பண்ணிட்டோம் சாமி... திரும்ப வாங்க... நாங்க இருக்கோம் உங்க கூடன்னு சொல்றதுக்குத் தான், உங்கப்பாவை தேடிட்டிருக்கோம் தம்பி..!


உங்கப்பா திரும்பி வர வரைக்கும், எங்கள ஏமாத்துனவன சும்மா விடாதீங்க தம்பி...!

இது தான் அந்த ஒரிஜினல் கதை..!

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# ஜி.பி. சோமசுந்தரம்

## ஜூன் 25 (1971)



கழகத்தின் முதுபெரும் தலைவர். “பட்டாளத்துச் சிங்கம்” எனவும், “சேலத்துப் பெரியார்” எனவும் கழகத் தோழர்களால் அன்போடு அழைக்கப்பட்டவர்.

திராவிட இயக்கத் தொடக்க காலத்திலிருந்து தொண்டாற்றி வந்தவர். பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புக்கும், மரியாதைக்கும் உரிய கழக முன்னணித் தலைவர்களில் முக்கியமானவராக விளங்கியவர்.

கழகத்தின் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் – சேலம் மாவட்டக் கழகச் செயலாளராகவும் – மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**